ISSN:2582-9599



# மேடை நாடகத்தமிழ் வளர்த்த கலைஞர் கருணாநிதி

**முனைவர் ஜோ.சகாய பவுலின்**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை – 18.**

**43**

**ஆய்வுச்சுருக்கம்**

இசையும், கூத்து தமிழர்களின் பழமையான கலைகள். அத்தகைய சிறந்த கலைகளைப் படைத்த கலைஞர்களின் படைப்புகள் சமுதாயத்தின் போற்றுதலுக்கு உட்பட்ட செல்வமாகும். நாடகக்கலை வரலாற்றில் அத்தகைய சிறப்புமிக்க கலைஞர்களின் பங்களிப்பையும் சமுதாயத்திற்கு அவர்கள் ஆற்றிய தொண்டினையும் பதிவு செய்வதென்பது ஆய்வாளர்களின் கடமையாகும். கலைஞர்களின் நாடகங்களைப் பட்டியலிடுவதால் மட்டுமே நாடகத்தமிழுக்கு கொடை வழங்குதல் இயலாது. நாடகத்தால் விளைந்த சமூக மாற்றங்களையும், சீர்திருத்தங்களையும் மக்களின் மனதில் பதிய வைப்பது சாலச்சிறந்தது. தம் பன்னிரெண்டாம் வயதில் தொடங்கிய நாடகப்பணியை தம் தொன்னூற்றிரண்டாம் அகவை வரைத் தொடர்ந்து ஆற்றி மகிழ்ந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதியின் மேடை நாடகச் சிறப்பினை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

நாடகக்கலை வரலாறு - நாடகத்தமிழுக்கான கொடை - மறுமலர்ச்சியின் முக்கியப் பங்கு - முத்தமிழ்க் காவலன் – அடையாளங்கள் - மூடநம்பிக்கை ஒழிப்பு - பெண்ணியம் குறித்த பதிவுகள் – கதைக்களம்.

**முன்னுரை**

மனிதன் தன் கருத்துப் பரிமாற்றத்தைக் குரல் எழுப்பியும் உடல் அசைத்தும் மொழி தோன்றா பழங்காலத்தில் வெளிப்படுத்தினர். பரிணாம வளர்ச்சியென்பது ஒன்றிலிருந்து மற்றொன்று உருவெடுப்பதாகும். இவ்வாறான உடல் அசைத்தல், குதித்தல், ஆடுதல் போன்ற உடல்மொழி பேச்சுமொழியாக உருவெடுத்து கூத்துக்கலையாக மாறியது. பின்பு பரிணாம வளர்ச்சியினால் நாடகக்கலையாக வளர்ச்சி பெற்றது.

நட்டம், நடம், நடனம், வாணி, நாடகம், திருத்தம், தூக்கு, படிதம், கண்ணூள், தாண்டவம், நடை, நட்டனம் என்ற பல்வேறு வகைப்பட்ட சொற்கள் ‘நாடகம்’ என்ற பொருளை உணர்த்துகிறது. மேலும், “குரவை, துணங்கை, வெறியாடல், அமலை, கழல்நிலை, துடி, வள்ளி, முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை, அல்லிக்கூத்து, கடையக்கூத்து, கபாலக்கூத்து, குடக்கூத்து, குடைக்கூத்து, கொடுக்கொட்டி, துடிக்கூத்து, பாண்டரங்கம், பாவைக்கூத்து, போடாடல், மரக்காலாடல், மல்லாடல் போன்ற பல்வேறு வகைப்பட்ட கூத்துக்கலைகளும் நாடக வளர்ச்சிக்கு தோற்றுவாயாக அமைந்தது. கூத்தக்கலையின் பரிணாம வளர்ச்சியாய் கி.பி.18ஆம் நூற்றாண்டில் உருவெடுத்தது நாடகக்கலை. நாடகத்துறையைச் சார்ந்தவர்கள் தன்னலம் கருதாது இழிச்சொற்களுக்கு அஞ்சாது, தமிழ் நாடகம் செழிக்க வேண்டி அரும்பாடுபட்டனர். சிறந்த கலைஞர் பலர் இன்று மறக்கப்பட்ட நிலையில் மேடை நாடக மறுமலர்ச்சியில் முக்கிய பங்கு வகித்த, பன்முகத் திறன் கொண்ட கலைஞரின் தனித்தன்மையினைக் கூறும் விதமாக இக்கட்டுரையின் சிறப்பு அமைகின்றது.

**முத்தமிழ் அறிஞர்**

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் கால்தடம் பதித்த சிறந்த அறிஞர் கலைஞர் கருணாநிதி.

1924ஆம் ஆண்டு, ஜூன் மாதம் மூன்றாம் நாள் முத்தவேள் - அஞ்சுகம்மாள் தம்பதியினருக்கு மகனாகத் தஞ்சை மாவட்டம் திருக்குவளை கிராமத்தில் பிறந்தார். முத்துவேலர் இசையின் மீதும் கூத்தின் மீதும் தீராக் காதல் கொண்டிருந்தார். தந்தையின் கனவை மனதில் இருத்தி, தன் காவியமாய் நாடகம் தன்னைத் தமிழகத்துக்குப் படைத்து வழங்கினார் கலைஞர். நாடகத்துறையில் கலைஞரின் வசனத்திற்கென தனி ரசிகர் பட்டாளமே உண்டு. அழகிய தமிழும், அடுக்கு மொழியுமே இவரது தனித்துவம்.

**மேடை நாடகங்கள்**

19ஆம் நூற்றாண்டில் இலக்கிய மறுமலர்ச்சி நிகழ்ந்தது. இந்திய மொழி உரைநடை வளர்ச்சியுற்ற காலத்தில் தமிழ் நாடகம் அதற்குரிய இலக்கிய மதிப்பைப் பெறவில்லை. என்பதனை,

**“கூத்தாடுமிடத்தில் அறிவுடைய**

**சான்றோர் எவரும் செல்லார்”**[1]

என்ற பாடலடிகளுக்கு ஏற்ப நாடகக் கலையைக் கற்றோர் விரும்பாத நிலை ஏற்பட்டது. பம்மல் சம்மந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள் வருகைக்குப் பின்னர் நாடகத்துறையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. மேடை நாடகங்கள் “மன்றம், அகாதமp, சபா, கிளப்” என்ற பல குழுக்கள் மூலம் நாடகங்களை அரங்கேற்றம் செய்தன. கோயில்களில் வேத்தியல், பொதுவியலாக தஞ்சமடைந்த தெருக்கூத்து மேடை நாடகங்களாகப் புத்துயிர் பெற்றது.

**கலைஞரின் மேடை நாடகங்கள்**

இணையற்ற நாடக ஆசிரியராகவும் இலக்கியவாதியாகவும் வசனகர்த்தாவாகவும் தயாரிப்பாளராகவும் கோலோச்சி நின்ற கலைஞர் தூக்குமேடை, மகான் பெற்ற மகான், நச்சுக்கோப்பை, சாக்கிரட்பீசு, பprரப்பிரம்மம், சிலப்பதிகாரம், சேரன் செங்குட்டுவன், பரதாயனம், திருவாளர் தேசிய; பிள்ளை, உதயசூரியன், பழனியப்பன், நச்சுக்கோப்பை, மணிமகுடம், ஒரே ரத்தம், காகிதப் பூ, நானே அறிவாளி, வெள்ளிக்கிழமை, அனார்கலி, சாம்பிராட் அசோகன் போன்ற இருபதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார். தம் வசனநடையாளும், நடிப்புத்திறத்தாலும் அனைவரையும் கவர்ந்த உன்னத அறிஞர் கலைஞர் என்பதனை இந்நாடகங்கள் வழி அறிய முடிகிறது.

**“கூத்தும் விழவும் மணவும் கொலைக்களமும்**
**ஆர்த்த முளையுள்ளும் வேறிடத்தும் ஒத்தும்**
**ஒழுக்கம் உடையாவர் செல்லாரே செல்லின்**
**இழுக்கம் இழவும் தரும்”** [2]

**நச்சுக்கோப்பை**

கலைஞரின் முதல் நாடக நூல் நச்சுக்கோப்பை. சாந்தா, ஏகாம்பரம் இவர்களின் காதல் வாழ்வினையும் பிரிவின் துயரினையும் அழகுற சித்தரிக்கிறது. இந்நிலையில் காதல் கைக்கூடா நிலையில், குடிகார ஆடவனைத் திருமணம் செய்துகொள்ளும் சாந்தா படும் துயரினை, குடிப்பழக்கத்தினால் ஏற்படும் துன்ப நிலையினைச் சிறப்புற எடுத்துரைத்தார். கணவனை இழந்த சாந்தாவை ஏகாம்பரமே மறுமணம் புரியும் புதுமையினைத் தன் கதையினில் புகுத்தி சீர்திருத்தம் செய்துள்ளார் கலைஞர்.

**“தண்ணீரையும் நாம் குடிக்கிறோம்**

**பாலையும் குடிக்கிறோம் - ஆனால்**
**எதையும் குடி என்று அழைப்பதில்லை**
**மதுவை  மட்டுமே குடி என்கிறோம் - ஏன்**
**அது உயிரைக் குடிக்கிறது?"**[3]

என்ற கண்ணதாசனின் கவிதை வரிகளை தம் நாடகத்தால் எடுத்தியம்பி மது பழக்கத்திற்கு எதிராக முழக்கம் இட்டுள்ளார்.

**மணிமகுடம்**

மக்களாட்சியின் மகத்துவத்தினை எடுத்துரைக்கும் நாடகம் மணிமகுடம். அரசியலில் சிக்கித்தவிக்கும் மக்களின் இயலாமையை, துல்லியமாகச் சித்தரித்துக் காட்டியுள்ளார். இதனை,

**"பிறப்பு (சாதி) வேறுபாடுகள்**
**நிலைத்திருக்கும் வரை மக்களாட்சி**
**வெற்றி பெறுதல் இயலாது"** [4]

என்ற பேராசிரியர் சி.இலக்குவனாரின் வரிகளால் உணரலாம். தாம் ஒரு அரசியல்வாதியாக இருப்பினும் துளியும் அச்சமின்றி மக்களாட்சியில் நிகழும் இருட்டறை நிகழ்வுகளை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார்.

இந்நாடகத்தில் ஏழைமக்கள் வாழ்கின்ற வீட்டினை இடித்துக் கோயில் கட்ட, மன்னன் முடிவு செய்கிறான். இதனை எதிர்த்து ஏழைகளின் கண்ணீரில் இறைவன் வாழ்வதா? என்ற கடவுள் மறுப்பு கொள்கையினையும் எடுத்தியம்புகிறார்.

**காகிதப் பூ**

திராவிடக் கருத்தியல் பிரச்சாரத்திற்குத் தூண்டுகோலாக அமைந்தது காகிதப்பூ நாடகம்.1996ஆம் ஆண்டு வெளிவந்த இந்நாடகம், கதராடை அணிந்து சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கும் அரசியல்வாதிகளைத் தோல் உரித்துக் காட்டும் நோக்கில் எழுதப்பட்டது. மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கம் கொண்ட தலைவர்களே அநPjp செய்யும் அவyநிலையை நாடகம் சுட்டிக்காட்டுகிறது.

**மேலும் சில நாடகங்கள்**

திரை உலகில் மட்டும் அல்லாது நாடகத்துறையிலும் தம் வசனநடை மூலம் பல மாறுதல்களைக் கொண்டு வந்ததோடு சமய மாற்றத்தினையும் ஏற்படுத்தியுள்ளார். ஆட்சி காலத்திலும் பிற நேரங்களிலும் சிறிதும் தொய்வில்லாமல் நாடகங்களைப் படைத்து நாடகத்துறைக்கு சேவையாற்றி வந்தார்.

**சிலப்பதிகாரம்**

உலகத்தமிழ் மாநாட்டில் வெளியிடப்பட்ட நூல் 'சிலப்பதிகார நாடகக்காப்பியம்' வரலாற்று நாடகத்தில் புதுமையினைப் புகுத்த சிறப்புற எடுத்துரைத்துள்ளார். இந்நாடகத்தின் சிறப்பினை அண்ணா குறிப்பிடும் போது,

**"அறிவும் கலைத்திறனும் இருக்கும் இந்த நாடகக் காப்பியத்தை எழுதுவதற்கு முற்றிலும் பொருத்தமானவர் கலைஞர்"** 5

என்று பாராட்டியுள்ளார். இந்நூலில் சிலப்பதிகார காப்பியத்தின் சிறப்பினை எடுத்துரைக்கையில் கலைஞர்,

**"தமிழர்க்கு ஒரு நீண்ட கால வரலாறு உண்டு அவர்களின் ஆணை கடல்கடந்து செல்வதுண்டு. அவர்களின் அன்பு உறவு கொண்ட நாடுகள் பல உண்டு. சிலப்பதிகாரம் உணர்ச்சி மிக்க**

**கதையோட்டம் கொண்டு மட்டுமல்ல விரிவான வரலாறும் கொண்டது"** [6]

என்று சான்று பகர்ந்துள்ளார். மாதவியைக் கலைக்கொடியாகவும், கண்ணகியை இல்வாழ்வின் தலைவியாகவும் வருணித்துக் கூறுமிடங்கள் அவரின் கலைத்திறனை மெய்ப்பிக்கிறது. கானல் வரியும், காதல் பிரிவும் என்ற காட்சி கற்போர் மனதை உறையச் செய்கிறது. இறுதியாக ஒற்றைச் சிலம்பின் ஒலியினைப் பெண்படும் பாட்டினைக் கற்பனை நயத்துடன் கற்போர் மனம் நெகிழும் படிப் படைத்துள்ளார்.

**முடிவுரை**

தமிழுக்காகவும், தமிழினப் பாதுகாப்பிற்காகவும் தொண்டாற்றியவர் கருணாநிதி. ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ் பயிற்று மொழிக் கொள்கை, தமிழ் கட்டாயப் பாடம், பிற மாநில, நாட்டு மாணவர்களும் தமிழ் பயிலும் திட்டம், திருக்குறளை மீட்டுப் பொது இடங்களில் அனைவரும் கற்கும் படிச் செய்தல் போன்ற பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டவர். தம் மேடை நாடகங்களில் சாதிய ஏற்றத்தாழ்வு, தீண்டாமை, பால் சமத்துவம் இன்மை, புராணக் கதைகள், சமஸ்கிருத எதிர்ப்புக் கொள்ளை போன்றவற்றைச் சித்தரித்தார். திராவிட இயக்க அதிகாரத்திற்குள் நுழைந்த பொழுதும் தம் நாடக அறிவைக் கைவிடாது பல சீர்திருத்த நாடகங்களைப் படைத்து அளித்தவர். தமிழ் உள்ளவரை கலைஞரின் நாடகச் சிறப்பும் நிலைபெற்று வாழும்.

**சான்றெண் விளக்கம்**

1. கணிமேதாவியார், ஏலாதி, பா.எண்.62
2. சொற்களஞ்சியம், பக்.எண்.116
3. கண்ணதாசன், கவிதைத் தொகுப்பு, பக்.68
4. சி.இலக்குவனார், வரலாறு பேசுகிறது. பக்.92
5. அறிஞர்.அண்ணா, சிலப்பதிகாரம் (அணிந்துரை), பக்.எண் .2
6. கலைஞர் கருணாநிதி, சிலப்பதிகாரம், பக்.எண். 22